IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR
MCOP. No. 51/2017

Deposition of RW 2 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on **20.12.2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | சர்மிளா | **Caste** | : | |
| **W/o.** | : | ஆனந்த் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை :-**

நான் தற்போது மேட்டுர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கணக்கராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து மேட்டுர் வட்டார போக்குவரத்து அலுவலருக்கு வரப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சி சொல்ல வந்துள்ளேன். இவ்வழக்கில் சாட்சியமளிக்க மேட்டுர் வட்டார போக்குவரத்து அலுவலர் எனக்கு அனுமதி கடிதம் கொடுத்துள்ளார். அது **சா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் தொடர்புடைய வாகன விபத்தில் சம்மந்தப்பட்ட TN 52 S 7266 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை கொண்டு வந்துள்ளேன். அதன் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் இவ்வழக்கில் தொடர்புடைய வாகன விபத்தில் சம்மந்தப்பட்ட TN 29 AK 6829 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை கொண்டு வந்துள்ளேன். அதன் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி விபத்தில் தொடர்புடைய இரண்டு இருசக்கர வாகனங்களை ஓட்டிய ஓட்டுனர்களுக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் மோட்டார் வாகன ஆய்வின் போது அவர்களது ஓட்டுநர் உரிமத்தை அவர்கள் இருவரும் சமர்ப்பிக்கவில்லை. மேற்படி வாகன ஓட்டுனர்களின் முகவரியின்படி அவர்கள் மேட்டுர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தான் ஓட்டுநர் உரிமம் பெறமுடியும் என்றால் சரிதான். நீதிமன்ற அழைப்பாணையில் கோரப்பட்டுள்ள பெயர் மற்றும் முகவரியை வைத்து எங்களது அலுவலக கோப்புகளை ஆய்வு செய்ததில் மேற்படி நபர்களுக்கு ஓட்டுநர் உரிமம்

வழங்கப்பட்டதற்கான ஆதாரம் ஏதும் கிடைக்கப்பெறவில்லை. மேற்படி விவரத்தை சா.சா.ஆ.1 ஆவணத்தில் வட்டார போக்குவரத்து அலுவலர், மேட்டுர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

**மனுதாரர் மற்றும் வழக்கறிஞர் ஆஜரில் இல்லை. மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

ஒம்/—சர்மிளா

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—எல்.கமலகண்ணன்,
சார்பு நீதிபதி,
மேட்டுர்.